இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 12-08-2023

# ஆமோதித்தார் அமித்ஷா

மணிப்பூர் கலவரம் குறித்து இது வரை எதிர்க்கட்சிகள் என்ன சொல்லி வந்தார்களோ, அதை நாடாளுமன்றத்தில் 'ஆம்' என்று ஆமோதித்து விட்டார் உள்துறை அமைச்சர் அமித்ஷா!

உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் சொல்வது இதோ..

★ மணிப்பூரில் நிகழும் தொடர்ச்சியான வன்முறை குறித்த எதிர்க்கட்சிகளின் கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

★ இனமோதல்கள் நடக்கிறது என்ற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்கிறேன்

★ வன்முறையில் நடைபெற்ற சம்பவங்கள் வெட்கக் கேடானவை.

★ மே 4 ஆம் தேதி நடைபெற்ற சம்பவம் (அதாவது பெண்களை ஆடை களைந்து ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூரம்) தொடர்பான வீடியோ சூலை 19 ஆம் தேதிதான் வெளியானது. அது குறித்து (மணிப்பூர்) அரசு அறிந்திருக்கவில்லை.

★ சமூக ஊடகங்களில் பகிரப்படுவதற்குப் பதிலாக அந்த வீடியோ மணிப்பூர் டி.ஜி.பி.க்கு கிடைத்திருந்தால் குற்றவாளிகளை உரிய நேரத்தில் கைது செய்திருக்க முடியும்.

★ பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசுடன் இரு சமூக மக்களும் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும்.

★ அண்டை நாடான மியான்மரில் பயங்கரவாதத்துக்கு எதிராக அந்நாட்டு ராணுவ ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து குக்கி சமூக அகதிகள், மணிப்பூர் மாநில பள்ளத்தாக்கில் குடியேறி இருக்கிறார்கள். இது இப்பகுதியின் மக்கள் தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.

★ மைத்தி சமூகத்தைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க மணிப்பூர் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது.

★ மே 3ஆம் தேதி தொடங்கிய வன்முறை இன்று வரை நடைபெற்று வருகிறது.

★ வன்முறை குறைந்த போதிலும் இரு சமூகத்தினருக்கு இடையே நிலவும் கோபம் இன்னும் தணியவில்லை.

- இவை அனைத்தும் உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் நாடாளுமன்றத்தில் சொன்னவை ஆகும். அதாவது, எதிர்க்கட்சிகள் எதைச் சொல்லி வருகிறார்களோ அதைத்தான் உள்துறை அமைச்சரும் வழிமொழிந்திருக்கிறார்.

இந்த வன்முறைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்? என்பதுதான் எதிர்க்கட்சிகள் எழுப்பும் கூடுதல் கேள்வி ஆகும். மணிப்பூரை ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங்கின் செயலற்ற தன்மைதான் இந்த வன்முறைக்குக் காரணம். தனது கட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை ஒன்றிய பா.ஜ.க. உள்துறை அமைச்சரால் அடக்க முடியவில்லை. அதுதான் இரண்டாவது காரணம். பிரதமர், இந்தப் பிரச்சினையில் கவனமாக இல்லை. அவர் பெரும்பாலும் வெளிநாட்டு சுற்றுப்பயணத்தில் இருந்தார். பாதிக்கப்பட்ட மக்களைப் போய் பிரதமர் பார்க்கவில்லை. மணிப்பூரில் இருந்து வந்திருந்த மக்கள் பிரதிநிதிகளையும் பிரதமர் பார்க்கவில்லை. அவர்கள் இரண்டு வாரங்களாக டெல்லியில் தங்கி இருந்து திரும்பிச் சென்றார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஒன்றிய அரசு தாமதமாகத்தான் நடத்தியது. அதற்கும் பிரதமர் வரவில்லை. மணிப்பூரில் ஒரு பிரச்சினை அரங்கேறி வருவதை பிரதமர் கவனிக்கவே இல்லை. அக்கறை செலுத்தவில்லை. அதுதான் மூன்று மாதங்களைக் கடந்தும் வன்முறை தொடரக் காரணம்.

இதைத்தான் எதிர்க்கட்சிகள் கூடுதலாகப் பேசுகிறார்கள். இதில் என்ன தவறு இருக்க முடியும்?

"வன்முறையில் நடைபெற்ற சம்பவங்கள் வெட்கக் கேடானவை. அவற்றை அரசியலாக்குவது அதை விட வெட்கக் கேடானது" என்கிறார் உள்துறை அமைச்சர். வன்முறைச் சம்பவங்களை ஏன் தடுக்கவில்லை, ஏன் நடவடிக்கை இல்லை என்று கேட்பது எப்படி அரசியலாகும்?

கொலை நடக்கலாம். ஆனால் குற்றவாளியைக் கைது செய் என்று சொல்லக் கூடாதா? கொள்ளை நடக்கலாம். ஆனால் குற்றவாளியைக் கைது செய் என்று சொல்லக் கூடாதா? பாலியல் வன்முறை நடக்கலாம். ஆனால் குற்றவாளியை கைது செய் என்று சொல்லக் கூடாதா? இதில் அரசியல் எங்கே வந்தது?

'மணிப்பூரில் நிலைமை விரைவில் சீராகும்' என்று சூன் 1 ஆம் தேதி பேட்டி அளித்தார் உள்துறை அமைச்சர். ஆகஸ்ட் 8 அன்றும் அதையே சொல்கிறார். ஏன் சீராகவில்லை என்று கேட்பதற்குப் பேர் அரசியலா?

மே 29-30 மணிப்பூர் மாநிலத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா இருந்த அன்றும் அந்த மாநிலத்தில் வன்முறை நடந்ததே. அப்போதும் குக்கி சமூகத்தவரது வீடுகள் எரிக்கப்பட்டதே. அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது பா.ஜ.க. அரசு அல்லவா? "மாநில அரசால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும்" என்று குக்கி மாணவர் அமைப்பின் டெல்லி தலைவர் திமோதி சோங்து பேட்டி அளித்தார். ஆனால் பா.ஜ.க. அரசு, பா.ஜ.க.வின் முதலமைச்சரைக் காப்பாற்றுவதில் தான் கவனமாக இருந்ததே தவிர மக்களைக் காப்பதில் அக்கறை செலுத்தவில்லை.

பள்ளத்தாக்கு மற்றும் மலை மாவட்டங்களில் இருந்த போலீஸ் பட்டாலியன்களிடம் இருந்தும், காவல் நிலையங்களில் இருந்தும் துப்பாக்கிகளை வன்முறையாளர்கள் பறித்துச் சென்றுள்ளார்கள். இப்போது வன்முறையாளர்களிடம் இருப்பது அரசாங்க துப்பாக்கி ஆகும். இது மாநில, ஒன்றிய பா.ஜ.க. அரசாங்கத்தின் கையாலாகாத்தனத்தைத்தானே காட்டுகிறது. இதனை விட உள்துறைக்கு அவமானம் இருக்க முடியுமா?

**அமித்ஷா சொல்வதைப் போல, 'வன்முறையில் நடைபெற்ற சம்பவங்கள் வெட்கக் கேடானவை'தான். அப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்ற போது தடுக்காததுதான் அதை விட வெட்கக் கேடானது. நடந்து போன வெட்கக் கேடுகளுக்குத் தீர்வு காணாமல் வார்த்தைப் புனுகு பூச முயற்சிக்கிறார் உள்துறை அமைச்சர். 'வெட்கக்கேடானது' என்று கண்டித்தால் போதுமா? 'இது போல இங்கே நிறைய நடக்கின்றன' என்று சொன்னாரே மணிப்பூர் முதலமைச்சர். அது வெட்கக் கேடானது இல்லையா? 'பிரேன் சிங்கை மாற்ற முடியாது' என்று உள்துறை அமைச்சர் சொல்வதுதான் அதை விட வெட்கக் கேடானது.**

●●

நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி இடைநீக்கம் அதிர்ச்சி அளிக்கிறது!

# மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் இடைநீக்கம் இதுவரை நடக்காதது!

## மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு - கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கடிதம்!

புதுடெல்லி, ஆக. 12-

நாடாளுமன்ற மக்களவை காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதிர்ரஞ்சன் சவுத்ரி இடைநீக்கம் செய்யப்பட்டதை அடுத்து, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எழுதிய கடிதத்தில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு, "தங்களின் (மக்களவை சபாநாயகர்) இச்செயல் அதிர்ச்சி அளிக்கிறது. மக்களவை எதிர்க்கட்சித் தலைவரை இடைநீக்கம் செய்வதென்பது இதுவரை நடந்திராத ஒன்றாகும். இந்த இடைநீக்க உத்தரவைத் தாங்கள் பிறப்பிக்கும் முன்னர் சற்று பொறுமை காத்திருக்கலாம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மக்களவையில் 8.8.2023 முதல் நடைபெற்ற பா.ஜ.க. அரசுக்கு எதிரான 'நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்' மீதான விவாதத்துக்கு நேற்று முன்தினம் (10.8.2023) பிரதமர் மோடி பதில் அளித்தார்.

அதன் பின்னர், ஒழுங்கற்ற நடத்தை மற்றும் அவை நடவடிக்கைகளுக்கு திரும்பத் திரும்ப இடையூறு செய்ததாகக் குற்றம்சாட்டி மக்களவையின் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆதீர் ரஞ்சன் சவுத்ரியை நேற்று முன்தினம் மாலை அவையில் இருந்து இடைநீக்கம் செய்து மக்களவைத் தலைவர் உத்தரவிட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களுக்கு நேற்று கடிதம் எழுதினார்.

அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

நேற்று மக்களவை காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஆதீர் ரஞ்சன் சவுத்ரி அவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டது தொடர்பாக இக்கடிதத்தை எழுதும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்துக்கு பிரதமர் மோடி அவர்கள் பதிலுரை அளித்தபோது மக்களவையில் என்ன நடந்தது என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்த நாங்கள் பிரதமரிடம் ஒரு விளக்கம் கேட்க முனைந்தோம். ஆதீர் ரஞ்சன் சவுத்ரி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் எழுந்து நின்று, 'நாங்கள் என்ன சொல்கிறோம் என்று ஒரு நிமிடம் செவிமடுக்க வேண்டும்' என வேண்டுகோள் வைத்து நின்று கொண்டு இருந்தோம். ஆனால், பிரதமர் எங்கள் கோரிக்கையை சற்றும் ஏற்கவில்லை. அது அவரது எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதான அக்கறையற்ற, பொருட்படுத்தாத



மனோபாவத்தைப் பிரதிபலித்தது.

அந்த நேரம் அவைத் தலைவரான தாங்கள் அவையில் ஆளும் தரப்பை நோக்கி பார்த்தபடியே இருந்தீர்கள். எதிர்க்கட்சிகளின் பக்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

மாலையில் அனைவரும் ஆச்சரியம் கொள்ளும் விதமாக ஆதீர் ரஞ்சன் சவுத்ரி மக்களவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்ற செய்தி கிடைத்தது. இந்த நடவடிக்கை துரதிர்ஷ்டவசமானது மட்டுமல்ல, இதுகாறும் நடந்திராததும் கூட. ஆளும் பா.ஜ.க. அரசு எதிர்க்கட்சித் தலைவரை இடைநீக்கம் செய்யும் இந்த அளவுக்குக் கோரிக்கை எடுத்துச் சென்றுள்ளது என்பது வேதனை அளிக்கிறது.

மதிப்பு மிக்க நாடாளுமன்ற மரபுகள் மீது பா.ஜ.க. கொண்டுள்ள சகிப்புத்தன்மையும் நியாயமும் அற்ற மனோபாவத்தினால் தாங்களும் உந்தப்பட்டு இருப்பது எங்கள் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

மக்களவையின் நடப்பு அமர்வில் ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சி வரிசை என இரு பக்கங்களிலும் இறுக்கமான சூழல் நிலவிய நிலையிலும் அவைத் தலைவரான தாங்கள், தங்களுக்கே உரிய சிறப்பான முறையில் பொறுமை காத்து அவையை பாராட்டுக்குரிய நல்ல முறையில் நடத்தி வந்தீர்கள். ஆனால், அவை அமர்வின் இறுதிக் கட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரை இடைநீக்கம் செய்தது அதிர்ச்சி அளிக்கிறது.

இருப்பினும், அவைத் தலைவரான தாங்கள், காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவரான ஆதீர் ரஞ்சன் சவுத்ரி அவர்களை இடைநீக்கம் செய்யும் உத்தரவைப் பிறப்பிக்கும் முன்னர் ஒரு நொடி சற்றே கூடுதல் பொறுமை காத்திருக்கலாம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் டி.ஆர்.பாலு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையத்தை பிரதமரின் கைப்பாவையாக்கும் அப்பட்டமான முயற்சி!

உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான ஒன்றிய அரசின் நடவடிக்கை!

# தேர்தல் ஆணையர் நியமனக் குழுவில் தலைமை நீதிபதிக்கு இடம் இல்லையாம்!

## மாநிலங்களவையில் மசோதா தாக்கல்!

புதுடெல்லி, ஆக.12-

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக தலைமை நீதிபதி இல்லாமல் தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்களை நியமிக்கும் புதிய மசோதாவை ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்தது.

தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் தேர்தல் ஆணையர்கள் ஒன்றிய அரசின் பரிந்துரையின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு வந்தனர். ஆனால், உச்ச நீதிமன்ற நீதிபதி கே.எம்.ஜோசப் தலைமையிலான அரசியல் சாசன அமர்வு, பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி கொண்ட குழுவின் பரிந்துரையின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில் இந்த நியமனங்கள் தொடர்பான சட்டம் கொண்டு வரப்படும் வரை இம்முறையே தொடர வேண்டும் என்று கடந்த மார்ச் மாதம் தீர்ப்பளித்தது.

இது தொடர்பான புதிய மசோதா நேற்று முன்தினம் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்படி பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர் பரிந்துரைக்கும் ஒன்றிய கேபினட் அமைச்சர் ஆகிய மூவரைக் கொண்ட குழு அமைக்கப்படும். இதற்கு பிரதமர் தலைவராக இருப்பார். இக்குழுவின் பரிந்துரையின்படி தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இதர தேர்தல் ஆணையர்களை ஜனாதிபதி நியமனம் செய்வார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த புதிய மசோதா, உச்ச நீதிமன்ற தீர்ப்பை நீர்த்து போக செய்யும் வகையில் உள்ளதாக கூறி காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் கடும் கண்டனம், எதிர்ப்பு தெரிவித்தன.

இது குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி வேணுகோபால் தனது டிவிட்டர் பதிவில், "புதிய மசோதா, தேர்தல் ஆணையத்தை பிரதமரின் கைப்பாவையாக்கும் அப்பட்டமான முயற்சியாகும். உச்ச நீதிமன்றம் ஏற்கனவே உருவாக்கிய குழு உள்ள போது புதிய குழு எதற்கு? பிரதமர் ஏன் தனக்கு சாதகமான தேர்தல் ஆணையரை நியமிக்க நினைக்கிறார்? இது அரசியலமைப்புக்கு எதிரானது, தன்னிச்சையானது மற்றும் நியாயமற்ற மசோதா. காங்கிரஸ் இதனை வன்மையாக கண்டிக்கிறது," என்று கூறியுள்ளார்.

ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் அவரது டிவிட்டர் பதிவில், "பிரதமர் தனது தலைமையில் குழு அமைப்பதன் மூலம் தான் விரும்பியவரை தேர்தல் ஆணையராக்க முடியும். பிரதமர் மோடி அடுத்தடுத்து எடுக்கும் ஒவ்வொரு முடிவும் இந்திய ஜனநாயகத்தை பலவீனமாக்கி வருகிறது," என்று தெரிவித்தார்.

திரிணாமுல் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சாகேத் கோகலே, "தலைமை நீதிபதிக்குப் பதிலாக தனக்கு கீழ் உள்ள அமைச்சரை நியமிப்பதன் மூலம், எதிர்க்கட்சிகளின் 'இந்தியா' கூட்டணி ஏற்படுத்தி உள்ள பயத்தில், தேர்தலில் வெளிப்படையாக மோசடி செய்து வெற்றி பெறுவதற்கான பா.ஜ.வின் அடுத்த கட்ட நடவடிக்கையாகும்," என்று தனது டிவிட்டரில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் அனூப் சந்திர பாண்டேவின் பதவிக்காலம் வரும் பிப்ரவரி 14ம் தேதியுடன் முடிவடைகிறது. அதற்குள் அடுத்தாண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்படுவதற்கு சில நாட்கள் உள்ள நிலையில் அவர் பதவிக்காலம் முடிவடைய உள்ளது. எனவேதான் தேர்வுக் குழுவில் இருந்து தலைமை நீதிபதியை நீக்கும் மசோதாவை தாக்கல் செய்து நிறைவேற்றுவதில் ஆளும் ஒன்றிய அரசு அதிக அக்கறை, அவசரம் காட்டுவதாக அரசியல் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் ஆணையத்தை பிரதமரின் கைப்பாவையாக்கும் அப்பட்டமான முயற்சி. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் உள்ளதாக அரசியல் கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.

50 சதவிகிதத்திற்கும் மேலாக

# மக்களவையில் ராகுல்காந்தி பேச்சு இருட்டடிப்பு!

## 'சன்சத்' டி.வி. மீது குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 12-

நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீதான விவாதத்தை ஒளிபரப்புவதில் 'சன்சத் டி.வி.' எனப்படும் மாநிலங்களவை தொலைக்காட்சி பாரபட்சத்துடன் நடந்து கொள்வதாக முதல் நாளே குற்றச்சாட்டு உள்ளது. அமைச்சர்கள், ஆளும் கட்சி எம்.பி.க்கள் பேசும் போது அவர்களை முழுமையாகக் காட்டும் கேமிரா, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, அவர்களைக் காட்டாமல் சபாநாயகரை காட்டும் வகையில் அமைக்கப்படுவதாக புகார் எழுந்தது.


இந்நிலையில், புதன்கிழமையன்றும் இந்த இருட்டடிப்பு வேலையை சன்சத் டி.வி. தொடர்ந்ததாக, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஸ்மிருதி இரானி உள்ளிட்ட பா.ஜ.க.வினர் பேசும் போது அவரையே காண்பித்து வந்த மாநிலங்களவை தொலைக்காட்சி, ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பேசும் போது அவர்களைச் சரியாக காண்பிக்கவில்லை. மேலும் பல நிமிடங்கள் சபாநாயகரையே காண்பித்து வந்த நிலையில், கனிமொழி கருணாநிதி பேசும் போதும் அவரை முழுமையாகக் காண்பிக்கவில்லை என இந்தியா (I.N.D.I.A) கூட்டணி கட்சி எம்.பி.க்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக அப்போதே கதிர் ஆனந்த், தமிழச்சி தங்க பாண்டியன் உள்ளிட்ட எம்.பி.க்கள் எழுந்து எதிர்ப்பு தெரிவித்தனர். அதன் பின்னரும் அதே நிலைமை தொடர்ந்ததால் மீண்டும் மற்ற எம்.பி.க்கள் குரல் எழுப்பினர்.

அவர்களைத் தடுத்த கனிமொழி கருணாநிதி, "பா.ஜ.க.வினருக்கு நம்மீது பயம், நமது முகத்தைப் பார்க்க பயமாக இருக்கிறது போல நாம் பேசுவதையாவது அவர்கள் கேட்கட்டும்" என்றார். மேலும் மணிப்பூர் மக்கள் பேசுவதை தான் அவர்கள் கேட்கவில்லை நாம் பேசுவதையாவது கேட்கட்டும் என்று தெரிவித்தார். அதன்பிறகும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும் காட்சிகள் ஒளிபரப்பாகாத நிலையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். தேசிய மாநாட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பரூக் அப்துல்லாவின் உரையின் போதும், சபாநாயகர் நாற்காலியில் இருந்த ரமாதேவியின் மீதே கேமிராக்கள் குவிந்தன. இந்நிலையில், மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது ராகுல் காந்தி புதன்கிழமை ஆற்றிய உரையில் 40 சதவிகிதம் மட்டுமே சன்சத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது என்று காங்கிரஸ் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறு கையில், 'மக்களவையில் ராகுல் காந்தி 37 நிமிடங்கள் பேசினார். ஆனால், 17 நிமிடங்கள் 37 விநாடிகள் மட்டுமே அவருடைய பேச்சு 'சன்சத் தொலைக்காட்சி'யில் ஒளிபரப்பப்பட்டது. மேலும், மணிப்பூர் விவகாரம் குறித்து அவர் பேசும்போது, சன்சத் தொலைக்காட்சி கேமிரா ராகுல் காந்தியை காண்பிக்காமல், 71 சதவிகித நேரம் அவைத் தலைவரையே காண்பித்துக்கொண்டிருந்தது. ராகுல் மீதான பிரதமர் மோடியின் அச்சத்தையே இது வெளிப்படுத்துகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; தமிழ்நாட்டுல எங்களை இந்தியும் சமஸ்கிருதமும் படிக்க விடலை என்கிறாரே நிர்மலா சீதாராமன்?

**போண்டி :** **ஆமாய்யா, அதுனாலதான் உங்களால இந்தியாவுக்கு நிதி அமைச்சராவே வர முடிஞ்சது மேடம்!**